Regd. No. M. 4900. 8-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-1-0

குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 4-0-0. வெளிநாடு ரூ. 6-0-0.

மாலை 21 } ஈரோடு 18-10-1947 சனிக்கிழமை { மலர் 6.

தொழிலாளர் கடமை

[தொழிலாளரியக்கம் குறித்துப் பெரியாரவர்கள் கொண்டிருக்கும் கருத்து இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் சூழ்நிலைகளைப் பொருத்து இன்றைக்குக் கூறுவதன்று. 1926ம் ஆண்டிலேயே பெரியாரவர்கள் கொண்டிருந்த கருத்து இந்நாளுக்கும் பொருத்தமுடையதாக இருக்கிறது என்பதை கருதி இதை வெளியிடுகிறோம்.

இது 25–6–26ம் நாள் நாகைத் தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் சார்பாய் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் பேசி, 30–6–26ம் நாள் 'குடி அரசி'ல் [மாலை 2–மலர் 5] வெளிவந்ததாகும்.

ஓராண்டு கழித்துப் பெரியார் அவர்கள் கருத்துக்கு மாறாக நாகைத் தொழிலாளர்கள் S. I. Ry. ஸ்ட்ரைக் என்னும் வேலை நிறுத்தம் செய்தனர்; பொது நலனுக்குழைப்பதாகப் பேசும் காங்கரசாரும் தொழிலாளர் தலைவரென வேஷம் போட்ட பிராமணோத்தமர்களும் தமிழ் நாட்டில் அக்காலத்திலிருந்த பிற தொழிலாளர் கட்சிகளும் இவ்வேலை நிறுத்தத்தை எதிர்த்ததையும், "சுயமரியாதை இயக்கமும்" 'குடி அரசு' 'திராவிடன்' என்ற இரு பத்திரிகைகளுமே வேலை நிறுத்தத்தை ஆதரித்து பேசியும் எழுதியும் வந்தன என்பதையும் அதுசமயம் பெரியாரும் வேறு நண்பர் சிலரும் வேலை நிறுத்தத்தில் கலந்து சிறை சென்றதையும் திராவிட நாட்டு மக்கள் நன்குணர்வார்கள்.

இதை நாம் குறிப்பிடுவது எதற்காகவென்றால், இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்குமே காங்கரசும் பார்ப்பனர்களும் தொழிலாளர் இயக்கத்தைத் தங்கள் நலனுக்குப் பயன்படுத்திக்கொண்டு தொழிலாளர் நலத்துக்கு விரோதிகளாயிருந்து வந்திருப்பதைக் காட்டுவதற்காகவேயாகும்.

பார்ப்பனர்களைத் தலைவர்களாகக் கொண்டு, காங்கரசாரின் காலடி பணிந்து, உயிர் வாழவேண்டிய நிலையிலிருந்து வரும் கம்யூனிஸ்ட் கட்சியைச்சார்ந்த திராவிட இளைஞர்களும், திராவிட இனத்தினரான தொழிலாளிகளும் தயவு செய்து இதனைப் பன்முறை படிக்க வேண்டுகின்றோம். படித்துத் தெளிவடைய விரும்புகிறோம்.

ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே தரகன்,—ஆண்டவனுக்கும் அடியவனுக்குமிடையே தரகன்,—வணிகனுக்கும் வாங்குவோனுக்குமிடையே தரகன்,—அதுபோல் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே, தரகராய் விளங்கும் தொழிலாளர் தலைவர்கள்.

இத்தகைய தரகர்கள் எத்துறையிலிருந்தாலும் நல்லதல்ல என்பதே அறிவுடையோரின் கருத்து. அதுவே திராவிடர் கழகத்தின் கருத்துமாகும். ஆ—ர்.]

★

பொதுவாய் இன்றைய தொழிலாளர் சங்கம் என்றாலே எனக்கு அதனிடத்தில் விருப்பமிருப்பதில்லை. அதில் ஒரு சத்து இருப்பதாகவே எனக்குத் தோன்றுவதில்லை. ஏனெனில் சில வெறும் வெளி ஆசாமிகள், அதைத் தங்கள் நன்மைக்கும் கீர்த்திக்கும் ஏற்படுத்திக்கொண்ட சாதனமென்பதே என்னுடைய வெகு நாளைய அபிப்ராயம். அல்லாமலும் நமது நாட்டில் உண்மையான தொழிலாளி ஸ்தாபனங்களே கிடையாது.

தொழிலாளர் யார்?

நமது நாட்டில் இப்போது தொழிலாளிகள் என்று சொல்லப்படுவோரெல்லாம் தொழிலாளிகளல்ல. அவர்கள் எல்லாம் கூலிக்காரர்கள்தான். தொழிலாளி என்பவன் நாட்டின் நன்மைக்கான ஒரு தொழிலைக் கற்று, அத்தொழிலைத் தானாகவே சுயேச்சையுடன் செய்து, அதன் பலன் முழுவதையும் தானும் தன் நாட்டு மக்களும் மாத்திரமே அடையும்படியான முறையில் தொழில் செய்பவன்தான் தொழிலாளி. நீங்கள் அப்படியில்லை. ஏதோ ஒரு முதலாளியின் கீழ் தினக்கூலிக்கு அமர்ந்து, உங்களுக்கு எவ்விதத் தொழில் சுதந்தரமும் இல்லாமல், முதலாளி சொல்லுகிறபடி வேலை செய்து விட்டு, அவ்வேலையின் பலன் முழுவதையும் அவனே அடையும்படி செய்து, முதலாளி நிர்ணயித்த—உங்கள் ஜீவனத்திற்குக்கூடப் போதுமானதாய் இல்லாத—கூலியை வாங்கிப் பிழைக்கின்றீர்கள். ஒரு முதலாளிக்குக்கீழ் அவன் சொல்லுகிறபடி வேலை செய்து கூலி வாங்குபவன் எவ்வளவு பெரிய கூலிக்காரனானாலும் அவன் கூலிக்காரன்தான், அதாவது அடிமைதான்.

தொழிலாளியும் தொழிலும்

தொழிலுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? தொழிலின் பலனுக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்? தொழிலின் அருமை உங்களுக்கு ஏதாவது தெரியுமா? காலையில் பட்டறைக்குள்

போய்ப் புகுந்தால் மாலை வரை அவன் சொல்லுகிறபடி உழைக்க வேண்டியது. வாரத்திற்கு ஒரு முறை கூலி வாங்கிக் கொள்ள வேண்டியது. தெருக்களில் கூலிக்கு மூட்டை தூக்கி அவ்வப்போது கூலி வாங்கும் நபருக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்? அவர்கள், தங்களுக்குக் கூலி போதாது; ஜீவனத்துக்குக் கட்டாது; அதிகப் பாரமாயிருக்கிறது; இன்னும் சேர்த்துக்கொடு; என்று முதலாளியைக் கேட்பதற்கும், நீங்கள் சங்கம் என்று பெயர் வைத்துக்கொண்டு செய்யும் தீர்மானங்களுக்கும் என்ன வித்தியாசம்? சில சமயங்களில் கூலிக்காரனாவது தான் தூக்கும் பாரத்தையும், தூக்கிக்கொண்டு செல்லும் தூரத்தையும் அறிந்து கூலி அதிகம் கேட்கிறான். நீங்கள் அதுகூட இல்லை. உங்கள் தொழிலின் அருமை இன்னதென்றுகூட உங்களுக்குத் தெரியாமல் முதலாளியைப் பார்த்து, நீ இவ்வளவு ரூபாய் கொள்ளையடிக்கிறாயே? நீ இவ்வளவு சுகப்படுகிறாயே; என்கிற பொறாமையின் மேல், என் எனக்கு இன்னும் கொஞ்சம் கூலி சேர்த்துக் கொடுக்கக் கூடாது என்று பல்லைக்காட்டிக் கெஞ்சுகிறீர்கள். தனித்தனியாய் கெஞ்சுவதற்குப் பதிலாய் நாலு பேர் சேர்ந்து கெஞ்சுவதைத் தொழிலாளர் சங்கம் என்கிறீர்கள். அதுவும் உங்களுக்குக் கெஞ்சிக்கேட்கச் சக்தியில்லாமல், உங்கள் தொழிலிலோ உங்கள் கஷ்டத்திலோ கொஞ்சமும் சம்பந்தமில்லாத ஒருவரை உங்கள் சங்கத் தலைவராயும் காரியதரிசியாயும் சில சமயங்களில் நிர்வாகஸ்தர்களாயும் வைத்துக்கொண்டு கூலியை உயர்த்தும்படி கேட்கிறீர்கள்.

தற்காலத் தலைவர்களால் பயனில்லை

ஒரு முதலாளியிடம் வேறு ஒருவன் போய், அய்யா உங்களிடம் உள்ள கூலிக்காரர்களுக்குக் கூலி போதவில்லை கொஞ்சம் சேர்த்துக்கொடுங்கள்; என்று சொன்னால் அந்த முதலாளிக்குக் கூலிக்காரர்களிடம் என்ன மதிப்பு இருக்கும்? அதுபோலவே உங்கள் சௌகரியத்திற்கு வேறு ஒருவன் போராடுகிறான் என்றால் உங்களுக்கு, உங்களுடைய தேவை இன்னதென்று கூடத் தெரியவில்லை என்பது தானே பொருள். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் உபாத்தியாயரிடம் போய் 'எனக்கு வயிறு வலிக்குதென்று எங்கள் அம்மா சொன்னாள், ஆகையால் இன்றைக்கு லீவு கொடுங்கள் என்று கேட்பது போலவே, நீங்கள் வேறொருவரை உங்கள் சங்கத்திற்குத் தலைவராக வைத்துக்கொண்டு அவர் சொல்லுகிறபடி காரியங்களைச் செய்வதும், உங்களுக்குச் சம்பந்தமில்லாதவைகளைப் பின்பற்றுவதுமாகும். வெளியிலிருந்து உங்களுக்குத் தலைவர்களாய் வருகிறவர்களுக்கு முதலாவது உங்கள் வேலையிலுள்ள கஷ்டமும் உங்களுக்கு இருக்கிற கஷ்டமும் அவர்களுக்கு எப்படித்தெரியும்? உதாரணமாக இது சமயம் நமது நாட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர்களை எடுத்துக்கொள்ளுங்கள். யாருக்காவது உங்கள் தொழிலின் அருமை தெரியுமா? உங்கள் கஷ்டத்தின் கொடுமை தெரியுமா? அவர்களது கீர்த்திக்காக நலனுக்குஆக உங்களுக்குத் தலைவராயிருப்பார்கள். அவர்கள் ஒரு தொழிலும் செய்யாமல் மாதம் 500, 1,000, 5.000, 10,000 என்று பொது ஜனங்களின் பணத்தை உங்கள் முதலாளிகளைப்போலவே கொள்ளையடித்துச் சுகபோகம் அனுபவித்துக்கொண்டு தங்கள் சுயநலத்தை நாடிக்கொண்டிருப்பவரா யிருப்பார்கள். அவர்களால், உங்களுக்கு எந்தத் துறையில் அனுகூலம் கிடைக்கக் கூடும்? அவர்களைக் கண்டால் உங்கள் முதலாளிமார்கள் எப்படி மதிக்கக் கூடும்? இந்த முகாந்தரங்களே நமது நாட்டுத் தொழிலாளர் சங்கங்கள் என்பது இதுவரை உருப்படியாகாமல் போனதற்குக் காரணம்.

வேலை நிறுத்தமும் தலைவர்களும்

அநேக இடங்களில் வேலை நிறுத்தம், வெளியேறுதல் நிகழ்கிறது. இவைகள் ஏற்பட்டு என்ன பலன் கிடைத்தது? அதன் பலனாய் எவ்வளவு தொழிலாளிகளுக்கு வேலை போய்க் கஷ்டமுண்டாயிற்று? இவற்றை எந்தத் தலைவர் கவனித்தார்? பல தொழிலாளிகள், தலைவர்கள் வார்த்தையைக் கேட்டதின் பலனாய் வயிறாரக் கஞ்சியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களை நடத்திய தலைவர்கள் இன்றையத்தினம் முன்னிலும் அதிகமான கீர்த்தியுடனும் வரும்படியுடனும் வயிறு வெடிக்கச் சாப்பிட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். மற்றும் பல தலைவர்கள் தங்கள் பிள்ளை குட்டிகளுக்கு உங்கள் முதலாளிமார்களிடம் உத்தியோகம் பெற்றுக்கொண்டுதானிருக்கிறார்கள். விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழுவது போல், வெளியார்களை உங்கள் சங்கத் தலைவர்களாய் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

தொழிலாளரும் அரசியலும்

அது மாத்திரமல்ல, உங்கள் சங்கதியே உங்களுக்குத் தெரியாமல் இப்படித் திண்டாடும்போது, சூதாட்டத்திற்குச் சமானமான அரசியல் கட்சிகளில் உங்கள் சங்கங்களை நுழைத்துக் கொள்ளுகிறீர்கள்; தனித்தனியாகவும் நுழைகிறீர்கள். கூலிக்காரனுக்கும் அரசியலுக்கும் வெகு தூரம். அரசியல் என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? உங்கள் வயிற்றுக்குக் கூலி கேட்கவே உங்களுக்குத் தெரியவில்லையானால் உலகத்தாருக்குத் தேவையை நீங்கள் அறிவதெப்படி? உங்களுக்கு இருக்கும் வியாதி இன்னதென்று கண்டு பிடிக்க உங்களால் முடியாமல் இருக்கும்போது நீங்கள் ஊராருக்கு வைத்தியம் செய்வதென்பது சிரிப்பாய் இருக்கவில்லையா? உங்களுடைய அரசியல் என்ன? முதலியாரை வண்டியில் வைத்து இழுக்கலாமா? நாயுடுவை வண்டியில் வைத்து இழுக்கலாமா? அய்யங்காரை வண்டியில் வைத்து இழுக்கலாமா? நாய்க்கரை இழுக்கலாமா? என்பது போன்றவையும், யாரைச் சட்ட சபைக்கு அனுப்பலாம்? யாருக்கு 'ஜே' போடலாம், யாருக்கு ஓட்டுப் போடலாம் என்பது தானே. நீங்கள் வண்டிச் சவாரி செய்யலாமா? நீங்கள் சட்டசபைக்குப்போய் உங்கள் தேவைகளைக் கவனிக்கலாமா? என்கிற கவலையே உங்களுக்கில்லையே. இப்பொழுது அரசியலில் உழலும் யாருக்காவது விடுதலை என்றால் என்ன? உரிமை என்றால் என்ன? சுயராஜ்யம் என்றால் என்ன? தொழிலாளர் விடுதலை என்றால் என்ன? என்பது தெரியுமா? எப்பொழுதாவது வாயைத் திறந்து சொல்லியிருக்கிறார்களா? வயிற்றுப் பிழைப்புக்கும் உத்தியோகத்திற்கும் உரிமை' 'உரிமை' 'சுயராஜ்யம்' 'சுயராஜ்யம்' 'தொழிலாளர்' 'தொழிலாளர்' என்று கத்தினால் நீங்களும் அதில் சேர்ந்து கத்துவதா? உங்கள் நிலைமையை இன்னதென்று அறியாமல் இப்படி மோசக்காரர்களுடன் சேர்ந்து அவர்களை உங்கள் தலைவர்களாக்கிக் கொண்டு அவர்கள் பின்னால் திரிந்தீர்களானால், நீங்கள் மற்றவர்களை வண்டியில் வைத்து இழுக்கவும், உங்கள் கழுத்தில் கயிற்றைக்கட்டி உங்களைச் சந்தைகளில் கொண்டுபோய் விற்கவும் தான் நீங்கள் ஆளாவீர்களேதவிர ஒருக்காலும் நீங்கள் மனிதர்கள் போல் வாழ முடியாது.

கண்டிப்பாய் நீங்கள் அரசியலில் சேரவே கூடாது. அரசியல் உங்களிடம் வந்து சேரட்டும். அரசியல்காரர்கள் உங்களைத் தலைவர்களாகக் கொள்ளட்டும் அப்பேர்ப்பட்ட நாளை எதிர்பாருங்கள்.

சங்கங்களைப் புதுப்பியுங்கள்

உங்கள் சங்கங்களுக்கெல்லாம் நீங்களே தலைவர்களாகுங்கள். உங்கள் நாட்டுத் தொழிலாளர் சங்கங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேருங்கள். பிறகு தொழிலாளர் கட்சி என்று ஒரு பொதுக்கட்சியை ஏற்படுத்துங்கள். அதில்

[தொடர்ச்சி 8ம் பக்கம்]

ஒரு சந்தேகம்!

கடவுள் பக்தனுக்கும்—கடவுளைப்பற்றிக் கவலைப்படாத பகுத்தறிவுவாதிக்கும் உரையாடல்.

(சித்திரபுத்திரன்)

★

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ப-வா:—அதைத்தான் உம் நண்பனும் உம்மைக் கேட்டான். என்னவென்றால் "அப்பா ரங்கசாமி உங்கள் வீட்டில் அன்றைக்குச் செத்துப் போனது நீயா உன் தம்பியா?" என்று. அவர் நீர் செத்துப்போனதாக முடிவு செய்துவிடவில்லையே. சந்தேகம்தானே கொண்டார். முடிவு செய்திருந்தால் உம்மைக் கேட்டிருக்கவே மாட்டானே! அப்படி இருக்க அவனை ஏன் முட்டாள், அயோக்கியன் என்று சொன்னீர்? அந்த மாதிரிதானே நீரும் சந்தேகப்படுகிறீர்.

க-ப:—என்னய்யா நீர் பேசுவதைப் பார்த்தால் கடவுள் உண்டா இல்லையா என்று சந்தேகப்பட்டாலே அது முட்டாள்தனம் அல்லது அயோக்கியத்தனம் என்றல்லவா சொல்லுகிறீர். இது நியாயமாகுமா?

ஆம் நான் அப்படிச்சொல்லவில்லை நீர் அப்படிச் சொன்னதை—அதாவது நன்றாய்த் தெரியும்படியான விஷயத்திற்குச் சந்தேகப்படுவதைப்பற்றி நீர் கொண்ட கருத்தை நான் சொல்லுகிறேன். நான் மாத்திரமல்ல பெரியவர்கள் என்பவர்களும் அப்படித்தான் சொல்லுகின்றார்கள். சாஸ்திரங்களும் அப்படித்தான் சொல்லுகின்றன. எல்லா மத வேதங்களும் அப்படித்தான் சொல்லுகின்றன

க-ப:—எப்படி அய்யா சொல்லுகின்றன?

ப-வா:—கடவுள் இருக்கிறார் என்பதை எவன் சந்தேகப்படுகிறானோ அவன் மகாமூடன் மாத்திரமல்லாமல் மகாபாபி என்றும் நாஸ்திகன் என்றும் அவன்முகத்தில்கூட விழிக்கக்கூடாதென்றும் மகாகோரமான நரகத்தில் வீழ்வான் என்றும் சொல்லப்படுகின்றது. அதாவது அறியமுடியாமல் இருப்பதை ஏற்றுக்கொள்ளாதவன் சந்தேகப்படுகிறவன் அயோக்கியன், பாபி, மூடன் நாஸ்திகன் என்று சொல்லப்படுகிறான். நானும் அதையேதான் சொல்லுகிறேன். அதாவது அறிவுக்கும் கண்ணுக்கும் மற்றும் இந்திரியங்களுக்கும் படாதவைகளை நம்புகிறவனும் அப்படி ஒன்று இருக்குமோ என்று சந்தேகப்படுபவனும் மூடனாகத்தான் இருக்கவேண்டும் என்கிறேன், நீரும் அப்படித்தான் அதைவிட அதிகமாகவும் சொன்னீர்.

க-ப:—நான் எப்போதையா சொன்னேன்?

ப-வா:—உம்ம நண்பனைப்பற்றி நீர் அப்படிச் சொல்லவில்லையா? "எதிரில் நின்று கொண்டு என்னோடு பேசிக்கொண்டு இருக்கிறபோதே என்னை நீ செத்துப்போய் விட்டாயா அதாவது இல்லாமல்போய் விட்டாயா" என்பதாகக் கேட்ட நண்பனை முட்டாள், அயோக்கியன், ஆணவக்காரன் என்றெல்லாம் சொல்லவில்லையா? அதுதான்.

க-ப:—நீங்கள் சொல்லுவதைப்பார்த்தால் சந்தேகப்பட்டது மடத்தனம் என்றுதான் தெரிகிறது. ஆனால் அநேகம் பேர்கள் இருப்பதாகவே நம்பிக்கொண்டு இருக்கிறார்களே அவர்கள் எல்லோருமா தெரியாமல் அறியாமல் இருப்பவர்கள் ஆவார்கள்.

ப-வா:—அவர்கள் எல்லோரும் நம்பிக்கொண்டிருப்பவர்களாகவே இருக்க மாட்டார்கள். பலர் உம் போன்றவர்களை நம்பும்படி செய்வதற்கு ஆக நம்பிக்கை காட்டுபவர்களாக இருப்பார்கள்; பலர் உம்மைப்போன்றவர்களாக இருப்பார்கள்.

க-ப:—அப்படியானால் இத்தனை கோயில், குளம், பிரார்த்தனை இடம், பூசை உற்சவம் இவைகள் எல்லாம் செய்வது எதற்கு? செய்கிறவர்கள் கருத்து என்ன?

ப-வா:—அதெல்லாம் வேறு சங்கதி இவைகளைச் செய்கிறவர்கள் எல்லோரும் ஒரே கருத்தைக்கொண்டு செய்கிறவர்கள் அல்ல. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு கருத்து இருக்கும். ஒரு மனிதன் விபூதி, நாமக்கட்டி, உருத்திராக்ஷக் கொட்டை, துளசிமணி மாலை இவைகள் விற்கிறானே அந்த விற்கிறவன் விற்பது, பக்திக்கு ஆகவா அல்லது அவைகளிடத்தில் உள்ள நம்பிக்கைக்கு ஆகவா.

க-ப:—இரண்டிற்கும் இல்லை தன் சொந்த இலாபத்துக்கு ஆக வாங்கி விற்கிறான்.

ப-வா:—கோயிலில் மணி அடித்து பூசை செய்கிறானே பூசாரி (அர்ச்சகன்) எதற்காக? பூசையால் மோக்ஷமடைவதற்காகவா?

க-ப—இல்லை வயிற்றுப்பிழைப்புக்கு ஆக பல தொழில்கள் போல் அந்தத் தொழில் செய்வதில் ஈடுபட்டதால் அதைச் செய்கிறான்,

ப-வா—மாதம் 1க்கு 100க்கு 2 ரூ. 5 ரூ. வட்டிக்குத் தந்திரமாக எழுதி வாங்கி வட்டிக்கு வட்டி போட்டு பாமர மக்களை கொள்ளை கொண்டு அநேகம் குடும்பங்களைக் கெடுத்த லேவாதேவிக்காரனும் ஒன்றுக்கு மூக்காலாக அளந்து போட்டுப் பொய் பேசி கள்ள விலை சொல்லி மக்களை ஏமாற்றிப் பணம் படைத்த வியாபாரியும், லஞ்சம் வாங்கின அதிகாரியும், பொய்யைப் பித்தலாட்டத்தை விற்றுப் பணம் சேர்த்த வக்கீலும் கோவில் கட்டுவதும், கட்டளை வைப்பதும், பூச்சும் வீச்சும் காட்டுவதும் எதற்கு ஆக? நம்பிக்கை கொண்டு பக்தி காட்டுவதற்கு ஆகவா?

க-ப—இல்லை, தனது கூடாத செயல்களை மறைப்பதற்கும் பொது மக்களுக்குச் செய்த துரோகத்தை மறக்கடிப்பதற்குமாகும்.

ப-வா—ஒரு தாசி சிங்காரித்துக் கொண்டு அழகு படுத்திக்கொண்டு கோவிலுக்கு வந்து ஆடுவது பாடுவது பக்தி பரவசம் காட்டுவது எதற்கு ஆக; தானும் பக்தர்களும் மோக்ஷமடையவா?

க-ப—இல்லை. கோவிலுக்கு ஆட்களை வரச்செய்யவும் தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளவும் இதனால் கோவிலுக்குச் செல்வாக்கும் வரும்படியும் ஏற்படுத்தவும் தனக்கு கிராக்கியும் வரும்படியும் உண்டாக்கிக் கொள்ளவும்தான்.

ப-வா—டிரஸ்டிகள், தர்மகர்த்தாக்கள், எண்டோமெண்ட் கமிஷனர்கள் கோவில்களில் பூச்சுப்போட்டுக் கொண்டு மேல் வேஷ்டியை இடுப்பில் சுத்திக்கட்டிக்கொண்டு கைகளைத் தோட்களில் போர்த்துக்கொண்டு உல்லாசமாய் அன்ன நடையில் வாயில் முணங்கிக்கொண்டு பொம்மைக்குப் பின்னும் முன்னும் நடக்கிறார்களே; அந்த பொம்மையைக் கடவுள் என்று அவர்கள் நம்பி இருப்பதாலா பக்திக்கு ஆகவா?

க-ப—இல்லை வேஷம் தான்.

ப-வா—இரண்டும் சரி. நம்பிக்கையைப்பற்றி இன்னம் என்ன தெரிய வேண்டும் என்கிறீர்.

க-ப—எல்லோரைப்பற்றியும் இப்படியே சொல்லிவிடலாமா?

ப-வா—நான் அப்படிச் சொல்லவில்லையே!

முட்டாள்தனமாக நம்புகிறவர்கள் உண்டு.

பிறரை ஏமாற்றுவதற்கு ஆக நம்பிக்கைக்காரர்கள் போல் காட்டிக்கொள்ளுபவர்கள் உண்டு.

வாழ்க்கை வழிக்கு ஆக அத்தொழில்

[தொடர்ச்சி 7ம் பக்கம்]

குடி அரசு

18-10-47 சனிக்கிழமை

ஈரோடு சேர்மென் தேர்தல்

17-10-47 தேதி காலை 10 மணிக்கு ஈரோடு சேர்மென் தேர்தல் நடந்தது. சுயேச்சையாக நின்ற தோழர் S. K. சென்னியப்ப கவுண்டர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலானது காங்கரஸ்—லீக் சரித்திரத்தில் முக்கிய இடம் பெற வேண்டியதாகும். ஏனெனில் காங்கரசும் லீகும் என்ன கொள்கையை அநுசரித்தன என்பது பற்றி 4-10-47ம் நாள் 'குடி அரசி'ல் ஈரோடு முனிசிபல் கவுன்சில் தேர்தல்பற்றிய விளக்கம் எழுதி இருந்தோம். அதன்படியே தேர்தல் ஓட்டு சேகரிப்பு நாடகம் நடந்தது. அதாவது மொத்த மெம்பர்கள் 24ல் காங்கரஸ் 8, காங்கரசல்லாத சுயேச்சை 16; என்றாலும் இந்தப்பதினாறில் சுயேச்சைச்சுயேச்சை 7 (இந்த சுயேச்சைச் சுயேச்சையில் திராவிடர் கழகம் 3), முஸ்லிம் லீக்குக்கு 4 அதன் ஆதரவு பெற்று வந்ததாகக் கருதியும் லீகு சொற்படி நடப்பதாக ஒப்புக்கொண்டும் வந்தவர்கள் 5 ஆக சுயேச்சை 9. இப்படியாக மூன்றுதாம் ஏற்பட்டு விட்டதால் மூன்றுதாத்திலும் சேர்மென் பதவிக்கு ஆசைப்பட்டு வேலைகள் நடந்தன. இதில் காங்கரசும் லீக்கும் கலந்து வேலை செய்தன. அதனால் அவர்கள் இருவரும் தங்களுக்குள் 17 என்று கணக்கு வைத்துக்கொண்டு அதில் 1க்கு மேற்பட்ட பலர் சேர்மன் பதவிக்கு ஓட்டுச்சேகரம் செய்தார்கள். சுயேச்சைச்சுயேச்சைக்காரர்கள் 7 பேரும் தங்களுக்குள் யாராவது ஒரு சுயேச்சைக்காரர் சேர்மனாய் வரவேண்டுமென்று கருதி ஓட்டுச் சேகரித்தார்கள். முடிவில காங்கரசும் லீகும் லீக் ஆதரவில் இருந்தவர்களும ஒத்துப்போய் விட்டதாக முடிவுக்குவந்து ஒரு காங்கரஸ் தோழரை ஆதரிப்பதாக 4 காங்கரஸ்காரர்களுட்பட 13 பேர் கையொப்பம் போட்டுக் கொண்ட ஆதரவை வைத்துக் கொண்டு தங்கள் காரியம் வெற்றி பெற்று விட்டதாக முடிவுக்கு வந்துவிட்டார்கள். இதையறிந்த கையொப்பமிடாத மற்ற 4 காங்கரஸ்காரர்கள் லீகு தயவில் லீகு ஆதரவில் சேர்மென் ஆவது காங்கரசுக்கு அவமானம் என்று காங்கரசுக்குள் கிளர்ச்சி ஆரம்பித்தார்கள். இதற்குக் காரணம் இரண்டொரு காங்கரஸ்மெம்பர்களுக்கு தங்களுக்குச் சேர்மென் பதவி கிடைக்கவில்லையே என்கின்ற காரணம் இருந்தாலும் இருக்கலாம். எனினும் இது மிகைப்படுத்தப்பட்டு காங்கரஸ் மேலிடத்துக்கும் புகார் செய்யப்பட்டுவிட்டது. இதன் மத்தியில் சுயேச்சை சுயேச்சைக்காரர்களில் ஒருவர் பெயரை வைத்து காங்கரஸ் அங்கத்தினர்களின் ஆதரவுபெற முயற்சி நடந்தது. மாகாணக காங்கரஸ் கமிட்டி தலைவர் காமராஜர் ஈரோடு வந்தார். அவரிடம் 14 பேர் கையெழுத்திட்ட ஆதரவு ஒப்புவித்து "இது லீக் தலைவரால் வலியவந்த ஆதரவு" என்றும், ஆதலால் தன்னை காங்கரசால் நிறுத்தப்பட்ட அபேட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ஒரு காங்கரஸ்காரர் கேட்டுக் கொண்டதோடு லீக் தலைவரையும், நேரில் காமராஜரிடம் அழைத்துச்சென்று இந்த ஆதரவு தன்னால் வலியவே கொடுக்கப்பட்டதென்பது ஆகவும் ஒப்புக்கொள்ளச்செய்யப்பட்டது. மற்ற காங்கரசு அங்கத்தினர்கள் இதை எதிர்த்து இந்தப்படி காங்கரசானது லீக் ஆதரவை ஒப்புக்கொள்வதானால் இந்த ஊர் உள்ள நிலைமையில் காங்கரசுக்குக் கெட்டபேர் வரும் என்றும், அப்படிச் செய்தால் தங்கள் உரிமைகள் பறிக்கப்பட்டதாகுமென்றும் கூறித் தடுத்து விட்டார்கள். மற்றும் பலராஜதந்திரம் நடந்தபின் காமராஜர் கடைசியாக காங்கரஸ் இந்தத் தேர்தலில் உத்தியோக முறையில் சம்மந்தப்படுவதில்லை என்றும், அவரவர்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளலாம் என்றும் முடிவு சொல்லி விட்டுப் புறப்பட்டு விட்டார். இதன் பயனாய் லீக் ஆதரவுபெற்ற காங்கரஸ் அங்கத்தினருக்கு ஓட்டுப்போடுவதாய் எழுதி கையெழுத்துப் போட்டுக் கொடுத்தவர்களிலும் இரண்டுபேர் விலகிவிட்டார்கள் ஆகவே 11 ஒரு கட்சியும், மீதி 13 ஒன்று சேர்ந்து இந்த மேற்படி ஒரு சுயேச்சை சுயேச்சை அங்கத்தினரை ஆதரிக்க முன்வந்து விட்டது. இதனால் போட்டி தவிர்க்கப்பட்டது. சுருக்கமாக ஒரு சம்பவத்தைச்சொல்லவேண்டுமானால் சுயேச்சைக்கட்சி பலம் பெற்ற பின்பு, இந்தசமயம் 11 பேர் கட்சி திராவிட கழகத் தோழர் ஈ. வி. கே. சம்பத்துவைத் தனியாக ஆதரிக்க முன் வந்து விட்டது. ஏன்என்றால் சேர்மென் தேர்தல் தனிப்பட்ட முறையில் ஆசையாயிருந்து முடிவில் தனிப்பட்ட தலைவர்கள் கட்சிக்காரியமாய் ஆகிவிட்டது. இந்த நிலையில் எந்தக் கட்சி வெற்றி பெற வேண்டுமானாலும் திராவிடர்கழக (சுயேச்சை) 3ம் சேர்ந்தால்தான் முடியும்போல் ஏற்பட்ட நிலைதான் காரணம்.

இதன் பயனாக எப்படியானாலும் தோழர் சம்பத்துதான் சேர்மென என்று "ஜோசியர்கள்" பந்தயம்கட்டி ஜோசியம் சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள் என்றாலும் தோழர் சம்பத்து இதைக்கண்டிப்பாய் மறுத்து விட்டார், மறுத்து விட்டதோடு நம் ஊரில் எப்படியாவது போட்டியின்றி தேர்தல் நடக்கவேண்டுமென்றும், தேர்தலில் யாரோ ஒருவர் எக்கட்சிப்பேரும் ஆதரவும் இல்லாத—யாருடைய ஆதரவும் இல்லாத சுயேச்சை அங்கத்தினர் வருவது நல்லமென்றும் கருதப்பட்டது. இடையில் இருகட்சியிலும் ஏதேதோ பல முயற்சிகள் 17ந்தேதி காலை 6மணிவரை நடந்தும் கடைசியாக நல்ல சம்பவமாக போட்டி இல்லாமல் ஒரு சுயேச்சைச் சுயேச்சை அங்கத்தினரே வெற்றிபெறும்படியாக நிலைமை வந்து சேர்ந்தது. அதனால் தோழர் எஸ். கே. சென்னியப்பக் கவுண்டர் போட்டியின்றி தேர்ந்

தெடுக்கப்பட்டார்.

இதில் காங்கரசுக்கு 8ஸ்தானங்கள் இருந்தும், லீக் வலிய 9 ஸ்தானங்கள் காங்கரசுக்குக் கொடுக்க முன் வந்தும், காங்கரசார் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலைமை அடைந்தது காங்கரசிலுள்ள தலைவிரி கோலமும், லீக்கை வீணாக துவேஷித்ததுமாகும். லீக் தன் கையில் தன் இஷ்டப்படி நடக்கக்கூடிய 9 ஸ்தானங்கள் இருந்தும், லீக் சொன்னபடி கேட்க காங்கரசில் 2ம், லீக்கை கண்மூடி ஆதரிக்க திராவிடகழகத்தில் 3ம் இருந்தும், அதை சரியானபடி பயன்படுத்தி லீக் வெற்றிபெற முடியாமல்போனது லீக்கின் வாய்ப்பு, தவறான முறையை கையாடின தன்மையாகும்.

இந்த நிலைமையில் திராவிட கழகத்தில் 3பேரே இருந்தாலும் அது தனக்கு இருகட்சி ஆதரவு இருந்தும் ஊரில் முனிசிபாலிட்டியில் கட்சி உணர்ச்சி இருப்பதற்கு இடமில்லாமல்—போட்டியில்லாமல் யாராவது வேறு ஒருவரே வரவேண்டுமென்றும், இம்மாதிரி சந்தர்ப்பத்தில் திராவிடர் கழகம் பதவிக்கு ஆசைப்பட்டதல்ல என்பதை நிரூபிப்பதற்கும் மனப்பூர்வமாய் தனக்கு வரும் பதவியை விட்டுக்கொடுத்து சமரசமாக காரியம் முடியச் செய்த காரியம் திராவிடக்கழகத்தின் தன்மை ஆகும். இதை ஈரோடு எல்லாக்கட்சி பொதுமக்களும் பாராட்டி வருவதோடு கழகத்தின் உண்மை தத்துவம் வெளியாகி கழகத்தை தவறாக நினைத்த மக்கள் சிந்தனைக்கு உணவாகி திராவிடக் கழகம் போற்றப்படுகிறது. இதனால் பெரியார் "ஸ்தலஸ்தாபனத்துக்குக் கட்சி தேவையில்லை" என்று சொல்லி வருவதை மனப்பூர்வமாகவே சொல்லுகிறார் என்பதை தோழர் சம்பத்து நிரூபித்துக்காட்டி விட்டார் என்றும் கருதப்படுகிறது.

லீகின் செய்கை லீகை உண்மையாய் எவ்வித நிபந்தனையும் இல்லாமல் முழுமனதோடு ஆதரித்து வந்த மக்களின் உள்ளத்தில் ஒரு புண்ணை உண்டாக்கி விட்டது என்பதையும் இதனால் கண்மூடி ஆதரித்துப் பின்பற்றி நடந்துவந்த பொதுமக்கள் கருத்திலும் ஒரு சலிப்பு உண்டாக்கி விட்டது என்பதையும் சொல்லாமல் இருக்க முடியாது. ஆனால் லீகின் பாலிசி (போக்கு) காங்கரசைத் தழுவிப் போவது என்று ஏற்பட்டிருக்குமானால் லீகு தலைவர்கள் நடந்துகொண்டதில் தவறில்லை என்றும் மகா ராஜதந்திரம் என்றும் சொல்லலாம். இனி லீகின் பாலிசி காங்கரசோடு இணங்கிப் போவதாகத்தான் இருக்கும் என்று காணப்படுகிறது. ஆனால் காங்கரசு ஆணவம் காட்டுவதானது பழிவாங்கும் தன்மை என்று சொல்லலாம்.

பாரதியார் மண்டபமா? பார்ப்பனர் வெற்றிச்சின்னமா?

(ஈட்டி எழுதுவது)

★

தமிழ் நாட்டில் தமிழனுக்கு, இன உணர்ச்சி தலையெடுத்து தமிழ் மொழிப்பற்றின் ஆர்வம் வெளியானது ஆச்சாரியார் கட்டாய இந்தியைப் புகுத்திய நேரத்தில் நிகழ்த்திய போராட்டத்தினாலாகும்.

தமிழ்ப்பற்று மிகுந்து இன உணர்ச்சி தோன்றியபோதுதான் தமிழ் மக்கள் தங்களின் உண்மையான பகைவர் யார்? பகைமைக் கருவிகள் யாவை? எனத் தீவிரமாகச் சிந்திக்கத் தலைப்பட்டனர். பார்பனர்—பார்ப்பனரல்லாதார் என்று கூறுவதே இழிவு; என உணர்ந்து தங்களுக்கென, தங்களையே குறிக்கும் தனிப்பெயர் கொள்ள விரும்பினார்கள். இவ்விருப்பம் இறுதியில் திராவிடர் என்று, வரலாற்றிற்கும், இழிந்த நிலை மாறி புனித நிலையடைதற்கும் பொருத்தமாக, யாரும் அசைக்க முடியாத உண்மைப் பெயராக, உணர்ச்சி தரும் கருவியாக, அமைந்து விட்டது.

இந்நிலையை யுணர்ந்த தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள், இந்நிலை நீடிக்குமேயானால் தங்களின் சோம்பேறி வாழ்வு சுடுகாடாகும் என்பதை நன்கு உணர்ந்து, வழக்கம் போல சாம பேத தான தண்டம் என நான்கு வகை உபாயங்களையும் கையாளுகின்றனர்.

தமிழ் மக்களின் தமிழுணர்ச்சியை—ஆரியர்க்கு விரோதமாக வீறிட்டெழுந்த விழுமிய உணர்ச்சி வெள்ளத்தை—வேறு வகையில் திருப்பி, திராவிடர்களுக்குள்ளேயே பிளவையுண்டுபண்ண வேண்டும் என்ற திட்டமிட்டே, தமிழர்—தெலுங்கர் போராட்டமாக மாற்றித் தவறுதலான வேறு வழியில் செல்ல இந்நாட்டுப்பார்ப்பனர்கள் முயலுகின்றார்கள். இம்முயற்சிக்கு, இந்நாட்டு வரலாற்றின் வாய்மைக்கிணங்கச்சில திராவிடர்களே ஆதரவு தருகின்றார்கள். இத்தகைய விபீஷணர்களைக் கொண்டு திராவிடர்களே தமிழர் தெலுங்கர் போராட்டத்தைத் தொடங்குகின்றார்கள் என வெளியுலகிற்குக் காண்பிக்கின்றது இந்நாட்டு ஆரியம். இவ்வுண்மையைத் தமிழ் நாட்டு அரசியல் போக்கைக் கண்ணுற்று வருகின்றவர்கள் நன்கு உணரலாம்.

தமிழுணர்ச்சி ஆரியத்தை அழிக்காமல் இருக்க வேண்டுமென்பதற்காகக் கையாளுகிற மற்றொரு வகை முயற்சிதான், பாரதி விழாவும் பாரதியை ஒட்டிய பிற நினைவுக்குறி நிகழ்ச்சிகளும் ஆகும்.

தமிழ் நாட்டின் பெரும் புலவர்களாகிய தொல்காப்பியர், திருவள்ளுவர், ஔவையார் போன்றவர்களை ஆரியக்கலப்பு என்று கூறி, இந்நாட்டு மக்களை ஆரியர்கள் இழிவு செய்து தன்னினத்திற்குப் பெருமை தேடிக்கொண்டதும், தமிழ் நாட்டின் பெருமையைச் சிதைத்து வந்த தமிழைக் கற்ற உ. வே. சாமி நாதய்யர், ராகவய்யங்கார் போன்ற ஆரியர்க்கு உயர்வு தந்து தன்னினப் பெருமையை நிலைநாட்டிக் கொண்டதும், தமிழ் வரலாற்றை அறிந்தோர் உணர முடியும்.

ஆரியர்கள் கையாண்டு வரும் பரம்பரை வித்தைக் கிணங்கவே சமீபத்தில் சுப்பிரமணிய பாரதியார் என்ற பார்ப்பனர்க்கு மண்டபம் எழுப்பிக் கும்பாபிஷேகம் செய்ததுமாகும்.

பாரதியாரை நல்லதொரு செவ்வியலைக் கவிஞர் என்று கூறுவதிலோ, உணர்ச்சி ததும்பப் பாடியவர் என்று கூறுவதிலோ நமக்கு எத்தகைய ஆட்சேபணையும் இல்லை.

ஆனால் பாரதியாரைத் தமிழ் நாட்டுத் தனிப்பெருங் கவிஞர் என்றும், தமிழுணர்ச்சியை வளர்த்தவர் என்றும் தமிழன் தலை நிமிர்ந்து நடக்க வழி செய்தவர் என்றும் கூறுவதுதான் திராவிட இனத்திற்கே அழிவைத் தருவதாய், திராவிட உணர்ச்சியை ஒழிக்கவல்லதாய் இருக்கின்றது என்பதையும், ஆரியர்கள், பாரதியாரைக் கொண்டு திராவிட உணர்ச்சியை ஒடுக்க வழி செய்கின்றார்கள் என்பதையும் எடுத்துக்கூற வேண்டிய நிலைமையை உண்டாக்கியிருக்கிறது.

தமிழறிஞர்களே! தமிழ்நாட்டு வரலாற்றைப் படித்த மாணவர்களே! நீங்கள் அறிந்த வரலாற்றை உங்களின் நினைவிற்குக் கொண்டு வாருங்கள். எந்த வரலாற்றிலாவது நீங்கள் வாழுகின்ற இத்தமிழ் நாடு ஆரிய நாடு என்று தீட்டப்பட்டிருக்கிறதா? தமிழ் நாட்டின் "அமரகவி" பாரதியார் கூறுவதைக் கேளுங்கள். நீங்கள் இப்பகுதிகளை அறிந்திருந்தாலும், அவைகள் அறிவில் நிலையாதவாறு இந்நாட்டில் ஆரியம் பேரொலி எழுப்பி, வெவ்வேறு வழிகளில் அறிவைச் செலுத்தச் செய்திருக்கின்றது என்பதனாலேயே, இங்கு அவைகளை எடுத்தியம்ப முன்வந்ததாகும்.

"உன்னத ஆரிய நாடெங்கள் நாடே"

என்று நாட்டின் பெயரைக் கூறி

"வானாறு பேரிமய வெற்பு முதல்
பெண்குமரி
யீறாகும் ஆரியநா டென்றே யறி"

என்று ஆரிய நாட்டிற்கு எல்லையும் கூறுகின்றார்.

இவர் கூறுகின்ற எல்லை முன் பொருகாலத்தில், "ஒரு மொழி வைத்து உலகாண்ட" இமயவரம்பன் காலத்தில், தமிழ் நாட்டின் எல்லையாகும்", எனப் புறநானூறு போன்ற தமிழிலக்கியங்கள் கூறும். பாரதியார் தமிழ்நாட்டின் எல்லையாக நூல்களில் குறித்திருப்பதையே ஆரிய நாட்டின் எல்லையாகக் கூறுகின்றார்.

தமிழ் நாட்டை ஆரிய நாடாகக் கூறுகின்ற பாரதியார் தமிழர்களின் பெருமையை ஆரியர்களின் பெருமையாகக் கூறுகின்றாரா என்றால் இல்லை.

"ஆதிமறை தோன்றிய ஆரிய நாடே"
என்று கூறுகின்றார்.

மேலும்,

"முன்னை இலங்கை அரக்கர் அழிய
முடித்த வில் யாருடைய வில்"

ஆரிய ராணியின் வில்
ஆரிய ராணியின் சொல்
ஆரிய தேவியின் தேர்

என ஆரியர்களின் பெருமையாக ஆரிய இராமனின் பெருமையைக் கூறுகின்றார்.

ஆரியர்களுடைய வேதங்களை (ஆங்கில ஆட்சியின் துணையைக் கொண்டு) கற்றறிந்த திராவிடர்கள், வேதங்களின் உண்மையை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். தங்களுக்கு மாறுபட்டவர்களாயிருப்பவர்கள், 'உயர்ந்த மாடி வீடுகளில், சிறந்த அணிகளோடு, நிறைந்த வாழ்வு வாழுகின்றார்களே" என வயிறெரிந்து இந்திரனையும் பிற தேவர்களையும் அழைத்து; இந்தத் தஸ்யூக்களை அரக்கர்களை அழித்துவிடுக" என வேண்டிக்கொண்ட பகுதிகளே வேதத்தில் நிரம்பவுண்டு என்று விளக்கங்கூறுகின்றார்கள். மகாகவி பாரதியார் கிருஷ்ணனை அழைத்துக் கூறுகின்ற கூப்பாட்டை நன்கு சிந்தித்துப்பாருங்கள்.

"ஆரியர்தம் தர்மநிலை ஆதரிப்பான்"
"ஆரியர் பாழாகாது அருமறையின்
உண்மை தந்த"
"எங்கள் ஆரிய பூமியெனும் பயிர்
மங்களம் பெற"
"ஆரியர் வாழ்வினை ஆதரிப்
போனே"
"ஆரிய! நீயும் நின் அறமறந்தாயோ"
"வெஞ் செயலரக்கரை வீட்டிடு
வோனே"
"ஆரியர் கோனே"

இக்கூப்பாட்டிற்கும் வேதங்களில் காணப்படும் பழைய ஆரியர்களின் கூப்பாட்டிற்கும் ஏதேனும் வேறுபாடு காண முடிகிறதா?

தமிழருக்குத் தமிழ் மொழியைத் தந்தவர்களே ஆரியர்கள் தான் என்பது ஆரியர்களின் கூற்று. தமிழர்கள் காட்டுமிராண்டிகளாயிருந்தார்கள். அவர்களை நாகரீகமுடையவர்களாக்கித் தமிழைச் செம்மையாக்கித் தந்தவர்— குடத்திலிருந்து பிறந்த அகத்திய முனிவர் என்பது ஆரியர்கள் கூறுங்கதை. இதனையேதான் தமிழின் பெருமையாக உலக மகாகவி கூறுகின்றார்.

"ஆதிசிவன் பெற்று விட்டான்
என்னை ஆரிய மைந்தன்
அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு..........
இலக்கணஞ் செய்து கொடுத்தான்"
எனவும்
"ஆன்ற மொழிகளினுள்ளே உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்"

இவ்வடிகளின் பொருளை நன்றாகச் சிந்தியுங்கள். இவை ஆரியத்தின் பெருமையை விளக்குகின்றதா? தமிழின் பெருமையை விளக்குகின்றதா?

வஞ்சகத்திற்கு ஆண்மை என்பது ஆரியர்களின் அகராதிப் பொருள். வாலியை மறைந்து கொன்ற இராமன் பேராண்மையாளன்—புருடோத்தமன்—என ஆரியங்கூறும். அதே போல பாரதியாரின் ஆசையைப்பாருங்கள்!

"ஆரிய நாட்டினர் ஆண்மை
யோடியற்றும் சீரிய முயற்சிகள்
சிறந்து மிக்கோங்குக"

எனக்கூறுகின்றார்.

இவ்வாறு, பாரதியார் ஆரிய நாடு, ஆரிய இனம், ஆரியமொழி ஆரியக் கலை ஆரியக் கடவுள், பெருமைகளையே பெருமையாகப் போற்றிப் பாராட்டியிருக்க, அவரைத் திராவிட இனத்தவர் போற்றுவது மானத்தோடு பொருந்திய செயலாய் இருக்க முடியுமா?

தீபாவளி, கிருஷ்ணஜயந்தி, ராமநவமி, சமணர் கழுவேற்றப்பட்ட உற்சவம் ஆகியவற்றைக் கொண்டாடுவது ஆரியர்களின் பெருமையையும் திராவிடர்களின் சிறுமையையும் எவ்வாறு உணர்த்துகின்றதோ, அதுபோலத்தான் பாரதியார் விழாக் கொண்டாடுவதிலும், பாரதியாருக்கு மண்டபம் சமைப்பதிலும் உள்ளது என்றால் யாரேனும் மறுத்துக்கூற இயலுமா?

பாரதியாருக்குக் கோவில் கட்டுவதிலோ அல்லது அதுபோன்ற பிற செயல்களிலோ நமக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் இத்தகைய செயல்களில் தமிழர்கள் திராவிடர்கள் கலந்து கொள்ளலாமா? எட்டையாபுரம் ராஜாவைப் போன்ற குறு நில மன்னர்கள், ஆரியத்தின் பெருமைக்கும் திராவிடத்தின் இழிவுக்கும் மடி தாங்கலாமா? என்ற கேள்வியை இனமானமுள்ள திராவிடன் கேளாமல் இருக்க முடியுமா?

திராவிட மந்திரிகளோ என்றால் அவர்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம். ஏனெனில் அவர்கள் நிலைமை அப்படி. அவர்கள் பெயரையே, ஆரியர்கள், மந்திரிப் பட்டியலிலிருந்து அழிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். கடைசி எழுத்திலே கையை வைத்து "ரி" யை அழித்த நிலையில்தான், இன்று அவர்கள் இராமாயணத்தில் காணப்படும் குரங்கு—வால்நரர்களைப் போல, ஆரிய உயர்வுக்குப் பாடுபடவேண்டியவர்களாய் ஆகிவிட்டார்கள். அனுமாரைப் போல இந்நாட்டு இளைஞர்களும் ஆக வேண்டும் என்று திராவிட மந்திரிகளே வாய் விட்டுக்கூறுகின்றார்கள்.

நிற்க, அனுமார் கோவில்கட்டி அனுமார் படை ஏற்படுத்தி, வணங்கித் தொண்டு செய்யும் திராவிடன் இது செய்வதுதானா அருமை? என்று திராவிட இன உணர்வுகொண்டவர்கள் அமைதி கொள்ளலாம். ஆனால், பாரதியைப் பெருமைப்படுத்துகின்றவர்கள், உண்மையிலேயே தமிழைப் பெருமைப்படுத்தியவர்கள் என்றோ தமிழ் நாட்டைப் பெருமைப் படுத்தியவர்கள் என்றோ தமிழரைப் பெருமைப்படுத்தியவரென்றோ கூறமுடியுமா? இதை நாம் கேட்கவில்லை. பாரதியார் பாடியன என்று மேலே எடுத்துக்காட்டிய பகுதிகளே இக்கேள்வியைக் கேட்கின்றன. செவியுடையோர்—சிந்தனை செய்யும் திறமுடையோர் இதை நன்கு உணரலாம்.

இவ்விழாவிற்குப் பொருளுதவி செய்தவர்களும், விழாவில் போய் மகிழ்ந்தவர்களும், விழாவை வெவ்வேறு வகையில் பெருமைப்படுத்தியவர்களும், ஆரியத்தின் பெருமை, ஆரிய உயர்வு, என்பதல்லாமல் தமிழின் பெருமை தமிழ் நாட்டின் உயர்வு என வாயால் பேச முடியுமா? என மனதில் கையை வைத்துக் கூறுங்கள்.

திராவிட உணர்ச்சியைச் சிதைப்பதற்காகச் செய்யப்படும் ஆரியர்களின் சூழ்ச்சிகளில் ஒன்றே, இப்பாரதி மண்டப விழாவும் பாரதி விழாவும் என்பதை, இப்போதாவது திராவிடர்கள் உணர்ந்து விழித்தெழுவார்களாக.

[3ம் பக்கத்தொடர்ச்சி]

களில் ஈடுபட்டு நம்பிக்கைகாட்டுபவர்கள் உண்டு.

உலக நடப்புக்கு இப்படி ஒன்று இருந்தால் நல்லது என்று நல்ல எண்ணத்தின்மீது இந்த நம்பிக்கையை பரப்புகிறவர்களும் உண்டு.

கடவுள் இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன உலகம் போகிற போக்கில் போய்க்கொண்டு இருப்போமே என்று கருதி உலகத்தோடு போகிறவர்கள் உண்டு.

"கடவுள் இல்லாவிட்டால் தப்பிக் கொள்ளலாம். ஒரு சமயம் நமக்குத் தெரியாமல் எங்காவது இருந்து விட்டால் நம் கதி என்னாவது என்று சந்தேகத்தின் பலனைக் கடவுள் பக்கம் கொடுத்து பக்தர்களாக நடப்பவர்களும் உண்டு.

இப்படியாக இன்னமும் எத்தனை விதக்காரர்கள் உண்டு.

க-ப—இப்படியே பேசினால் முடிவு தான் என்ன? உங்கள் கருத்துதான் என்ன?

ப-வா—இதில் என் கருத்தைச் சொல்ல நீர் பக்குவப்[illegible]ல.

க-ப—[illegible] என்னுடன் சொல்லி இந்தப் பிரச்சினையை [illegible]கிறீர்.

ப-வா—முடிவு இப்போதுதான் முடிவுகட்டுவதாக இல்லை. இது பழைய சங்கதி ஆதலால் புதிதாக ஒன்றும் செய்வதற்கில்லை.

க-ப—பழைய முடிவுதான் என்ன?

ப-வா—பழைய முடிவை சொல்லுகிறேன் கேளும். கடவுள் மனம், வாக்கு, காயத்துக்கு எட்டக்கூடியவர் அல்ல.

கடவுள் எவர் எவரோ தேடியும், ரிஷிகளும் முனிவர்களும் தேடியும், வேதங்கள் உபநிஷத்துகள் தேடியும், சித்தர், முத்தர் தேடியும் காணமுடியாதவர்.

கடவுள் ஒரு வஸ்து அல்ல,
கடவுள் இப்படிப்பட்டவர் என்று யாராலும் சொல்லமுடியாது.
கடவுளுக்கு குணம் இல்லை.
கடவுளுக்குச் செயல் இல்லை.
அறிவுதான் கடவுள்.
அன்புதான் கடவுள்.
இன்பம்தான் கடவுள்.
ஈகைதான் கடவுள்.
ஒழுக்கம்தான் கடவுள்.
சத்தியம்தான் கடவுள்.
சமாதிதான் கடவுள்.

என்றெல்லாம் ஏற்கனவே பெரியோர்கள் முடிவுகட்டி இருக்கிறார்கள்.

இவைகளிலிருந்து சர்வ சக்தி, சர்வ ஞானம், சர்வ வியாபகம் உள்ள கடவுள் என்பதாக ஒரு வஸ்துவோ, சக்தியோ குணமோ இருக்கிறதா?

அல்லது அவரவர்கள் எண்ணிக் கொள்ளுகிறபடி ஒன்று இருப்பதாகத் தோன்றுகிறதா?

அல்லது ஒன்று இருப்பதாக மக்களுக்குள் ஒரு உணர்ச்சி இருக்கும்படிசெய்ய வேண்டியது அவசியம் என்னும் கருத்தில் பலர் பல காரியத்துக்குஆக கடவுள் பிரசாரம் செய்து வருவதால் இந்தப் பிரச்சினைக்கு இடம் ஏற்பட்டதா? என்பனவாதிகளை உம்ம அறிவைக்கொண்டு 'உம்ம நண்பனை சோதித்துக்கொள்வதற்கு" ஆக பயன்படுத்திய அறிவை அதே முறையில் பயன்படுத்தி ஒரு முடிவுக்கு நீரே வாரும். இந்த ஒரு சாதாரண காரியத்துக்கு ஏன் அனாவசியமாய் நமது நேரம் வீணாகவேண்டும்?

க-ப—நேரம் வீணாகவில்லை அய்யா இதிலிருந்து எவ்வளவோ சங்கதி காண தெரிந்துகொண்டேன்.

ப-வா—அப்படியானால் சரி; போய் விட்டு வாரும். எனக்குத் தலைவலிக்கிறது.

க-ப—உங்களுக்குத் தொந்திரவு கொடுத்ததற்கு மன்னிக்கவேண்டும், போய் வருகிறேன்.

ப-வா—சரி போங்கள்.

பெரியார்

ஈரோடு, 18-10-47.

பெரியாரவர்கள் இன்று இரவு ஈரோட்டிலிருந்து சென்னைக்குச்செல்லலாமென அறிகின்றோம். சென்னையிலிருந்து 2-நாட்களில் திரும்பிவரலாம்.

1946-ம் ஆண்டில் அமெரிக்கா தனது வரும்படியில் நூற்றுக்கு $1\frac{1}{2}$ வீதமும், கிரேட் பிரிட்டன் 3 வீதமும், ரஷ்யா $5\frac{1}{2}$ வீதமும் பள்ளிக்கூடச் செலவுக்கென்று உபயோகப்படுத்தியுள்ளனவாம்.

o o

பாம்புகள் மணிக்குச்சுமார் $3\frac{1}{2}$ மைல் வேகம் ஓடமுடியுமாம். ஆனால் ஒரு பொழுதும் கண்களை மூடுவதேயில்லையாம்.

(2ம் பக்கத் தொடர்ச்சி)

உங்கள் தொழிலின் பலன் முழுவதையும் நீங்களே அடையத்தக்கதாகவும், தொழிலாளர்களுக்கு வேண்டிய நன்மைகளையும், பொது மக்களுக்கு வேண்டிய நன்மைகளையும் செய்யக்கூடியதாக வைத்துப் பாருங்கள். அதில் எல்லோரையும் வந்து சேரும்படி செய்யுங்கள். தொழிலாளர் கட்சி நாட்டையாளும்படி செய்யுங்கள். அதை விட்டு விட்டு எடுப்பார் கைப்பிள்ளையாய்த் திரிவது தொழிலாளர் உலகத்திற்கே மானக்கேடு. உங்கள் நிலை என்ன? மாடு கன்றுகளை வளர்க்கிறவர்களாவது, அவைகளை வேலை வாங்கின பிறகு, நிழலில் கட்டுகிறார்கள்; வேளா வேளைக்குத் தண்ணீர் காட்டுகிறார்கள். உங்களுக்கு அந்தச் சவுகரியங்கூட எங்கேயிருக்கிறது. பகலெல்லாம் உழைக்க வேண்டியது; கூலி வாங்க வேண்டியது, அதைக் குடிக்கோ, கூத்திக்கோ, சாமிக்கோ, சூதுக்கோ செலவு செய்ய வேண்டியது; பட்டினி கிடக்க வேண்டியது; பெய்யும் மழையும் அடிக்கும் வெயிலும் உங்கள் மேலேயே படவேண்டியது என்கிற கேவல நிலைமையிலிருக்கிறீர்கள். உங்களில் இரண்டொருவர் சுகப்படுவதை நினைக்காதீர்கள். பெரும்பான்மையாய் எப்படியிருக்கிறீர்கள்? இதைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. உங்கள் ஓட்டுக்கு மாத்திரம் அதிகக் கிராக்கி, யாராவது பணங்கொடுத்து அல்லது யாருக்காவது பணங்கொடுத்து உங்கள் ஓட்டுகளை வாங்கிப் பதவியைப் பெற்று விடுகிறார்கள்.

நீங்களே தலைவராகுங்கள்

ஆகையால் இன்று முதல் அரசியலையும் அரசியல் காரரையும் மறந்து விடுங்கள். உங்கள் சங்கத்திற்கும் வருஷாந்திரக் கொண்டாட்டங்களுக்கும் தொழிலாளர்களையே தலைவர்களாய் ஏற்படுத்துங்கள், அவர்களுக்குச் சக்தியில்லையே என்று குறை கூறாதீர்கள். அது உங்களுக்கு அவமானம். அதைவிட மோசமானவர்களை நீங்கள் தலைவர்கள் என்கிறீர்கள். அயோக்கியர்களைவிட முட்டாள்கள் நல்லவர்கள் என்றே சொல்லுவேன். இருக்கிறவர்களை வைத்துக் கொண்டு காரியங்களை நடத்துங்கள். கூடிய சீக்கிரம் எல்லாம் சரிப்பட்டுப்போகும். நான் ஒரு சிறு கதை கேள்விப்பட்டிருக்கிறேன்:—ஒரு குளத்திலுள்ள தவளைகள் ஒன்று சேர்ந்து தங்களுக்கு ஒரு தலைவர் வேண்டும் என்று கடவுளைக் கேட்டதாகவும், கடவுள் ஒரு மரக்கட்டையைத் தலைவராகக் கொடுத்ததாகவும், அம்மரக்கட்டை ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளிடம் சென்று, எங்களுக்குக் கொடுத்த தலைவர் உபயோகமில்லையென்று வேறு தலைவர் வேண்டுமென்று கேட்டதாகவும், கடவுள் ஒரு பாம்பைத் தலைவராகக் கொடுத்ததாகவும், அந்தப் பாம்பு தினம் 10 தவளைகளைத் தின்று வந்ததாகவும், பிறகு தவளைகள் கடவுளை நோக்கித் தங்களுக்குக் கொடுத்த தலைவரை எடுத்துக் கொள்ளும்படி வேண்டித் தங்கள் காரியத்தை வேறொரு தலைவரில்லாமல் தாங்களே பார்த்து வந்ததாகவும் சொல்லப்படுகின்றது. அதுபோல் உங்களிலேயே உங்களுக்குத் தலைவர்களும் காரியதரிசிகளும், நிர்வாகிகளும் கிடைக்கவில்லையானால், கண்டிப்பாய் உங்களுக்குச் சங்கம் வேண்டாம். இந்த நிலையில் நீங்களும் சங்கம் வைத்து நடத்தச் சக்தியற்றவர்கள். உங்களுக்குள் தலைவர் ஏற்பட்டு நடத்துவதற்குச் சக்தி வரும்வரை முதலாளிகளை அனுசரித்தே பிழையுங்கள், வீணாகக் குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு விட்டது போல் உங்கள் உழைப்பால் உங்கள் முதலாளிமார் பிழைப்பதோடல்லாமல், உங்களால் மோசக்காரர் பிழைக்கும்படி செய்து நீங்கள் கஷ்டப்படாதீர்கள். நீங்கள் என்னைக் கூப்பிட்ட போதே இதைத்தான் சொல்ல நினைத்தேன். இதுதான் உங்கள் சம்பந்தமான என்னுடைய அபிப்பிராயம்.

மதிப்புரைகள்:

'சுடலையின் நடுவே' என்ற ஒரு சிறிய நூல் நம் பார்வைக்கு வந்துள்ளது. தீட்டிய தோழர் கி. மனோகரன் ஆவார். இவர் மலையாளத்தைத் தாய்மொழியாகவுடைய ஒரு திராவிடர்—மாணவர்—என்பதை அறியும் போது, இவர் கையாண்டிருக்கும் தமிழ் நடையை வியவாமல் இருத்தல் இயலாது.

இந்தியா என்னும் துணைக்கண்டம் இந்நாளில் மதச் சுடலையின் நடுவே நின்று, மண்டி எரியும் பெரு நெருப்பில் மக்களை மடியச் செய்து வருகின்றது என்பதையும், இன்று மட்டுமல்ல, மதங்கள் தோன்றிய காலந்தொட்டே, மக்களைப் பேயர்களாக்கி, சிந்தனையைச் சுட்டெரித்து, மன்னர்களின் துணைபெற்று, சுயநல கும்பலுக்கு அடிப்படையாய் ஒரு சுரண்டல் இயந்திரமாகவே இருந்து வந்திருக்கின்றது என்பதையும், தீண்டாமையின் செவிலித்தாயாகவும் பெண்ணுரிமையைக் காய்ந்த நச்சரவாகவும் மதம் இருந்து வந்திருக்கின்றது என்பதையும் ஆசிரியர் நன்கு விளக்கியிருக்கின்றார்.

விலை ரூ. 1—0—0
தபாற் செலவு அணா 0—4—0
கிடைக்குமிடம்:-
'செல்வி' நாகர்கோயில்.

"சாரதி"

ஆசிரியர்: எஸ். ஆர். திருவேங்கடம்.
மாதமிருமுறை வெளிவருவது.

கலை, மொழி, உரிமை, சமத்துவம், சமுதாய முன்னேற்றம் கருதி, குறிப்பாகத் தமிழ்நாட்டிற்கும் சிறப்பாக ஐக்கிய இந்தியச் சீரமைப்பிற்கும், பொதுவாக உலக நலனுக்கும் உழைப்பது சாரதியின் குறிக்கோள் என ஆசிரியர் கூறுகிறார்.

பிரதி ஒன்றின் விலை அணா 0—4—0.

1926-ல் அமெரிக்காவில் வார்னர் தியேட்டர் தயாரித்த "டான்ஜுவான்" என்ற படத்தில் பிரதம பாகத்தில் நடித்த ஜான் பாரிமூர் என்பவர், 2 மணி 47 நிமிஷம் ஓடக்கூடிய அப்படத்தில் 191 முத்தங்கள் கொடுக்கிறாராம். சராசரி 53 வினாடிக்கு ஒரு முத்தம் வீதம் ஆகிறதாம்.

எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்

★

தத்துவ விளக்கம் (ஈ. வெ. ரா.)	0-12—0
ஞான சூரியன்	0— 6—0
(பாரதிதாசன் எழுதியவை)	
பாரதிதாசன் கவிதைகள்	3—8—0
பாண்டியன் பரிசு	3—8—0
எதிர்பாராத முத்தம்	1—4—0
காதல் நினைவுகள்	0-12—0
தமிழ் இயக்கம்	1—0—0
அழகின் சிரிப்பு	1—0—0
இசையமுது	0-10—0
குடும்பவிளக்கு I	0—6—0
குடும்பவிளக்கு II	0-10—0
சௌமியன்	1—4—0
கற்கண்டு	2—0—0
நல்ல தீர்ப்பு	0-10—0
(சி. என். அண்ணாதுரை எழுதியவை)	
ஏ! தாழ்ந்த தமிழகமே	0—8—0
நாடும் ஏடும்	0—6—0
நல்ல தீர்ப்பு	0—6—0
திராவிடர் நிலை	0—6—0
விடுதலைப்போர்	1—0—0
குமரிக்கோட்டம்	1—0—0
வர்ணாஸ்ரமம்	0-12—0
கம்பரசம்	1—8—0

கிடைக்குமிடம்:-
நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரிவீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.